**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சூலூர்**

**முன்னிலை: திருமதி.எம். சந்தோஷம்., பி.எஸ்.சி., பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, சூலூர்**

திருவள்ளுவர் ஆண்டு 2056 ஆண்டு விசுவாவசு வருடம், புரட்டாசி மாதம் 23 ம் நாள்

2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 9 -ம் நாள் வியாழக்கிழமை

**இடைநிலை மனு எண்.4/2025**

**in**

**அசல் வழக்கு எண். 187/2022**

1. யசோதாதேவி **...மனுதாரர் / வாதி**

//எதிர்//

1. வேலுச்சாமி
2. தனலட்சுமி
3. முத்துக்குமார் **... எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்**

இந்த மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.முத்துக்கிருஷ்ணன், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.லோகநாதன், அவர்கள் ஆஜராகியும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரிய கண்காணிப்பில் இருந்து வந்து சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டு இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

கட்டளை 6 விதி 17 R/W பிரிவு 151 ன் படி உரிமையியல் நடைமுறை சட்டத்தின் கீழ் மனுவில் கோரியுள்ள திருத்தங்களை தாவாவில் மேற்கொள்வதற்கு அனுமதி அளிக்குமாறு, மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:**

1.1). மனுதாரர்/ வாதி அசல் வழக்கினை பிரதிவாதிகளுக்கு எதிராக ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார். மேற்படி அசல் வழக்கு தாக்கல் செய்யப்படும்பொழுது தாவா சொத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை கண்டறிவதற்காக மனுதாரர்/ வாதி நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமனம் செய்யுமாறும், அரசு நில அளவையர் உதவியுடன் தாவா சொத்தினை நில அளவை செய்து அது தொடர்பான அறிக்கையினை தாக்கல் செய்ய உத்தரவிடுமாறும் கோரி I.A.No.3/2022 என்ற எண்ணில் மனு தாக்கல் செய்திருந்தார். மனுவின் அடிப்படையில் நீதிமன்ற ஆணையராக வழக்குரைஞர் திரு.யுவராஜ் என்பவர் நியமனம் செய்யப்பட்டார். அவர் நில அளவையர் முன்னிலையில் தாவா சொத்தினை அளவீடு செய்து தாவா சொத்தான சயிட் எண்.10 ல் சுமார் 5.5 ச.மீ அளவிலும், சயிட் எண்.11 ல் சுமார் 9.9 ச.மீ அளவிலும் ஆக்கிரமிப்புகள் செய்யப்பட்டுள்ளதாக அறிக்கை வழங்கியுள்ளார். இச்சூழ்நிலையில் மனுதாரர்/ வாதி வழக்கு தாக்கல் செய்யும்போது தாவா சொத்துக்களை பொறுத்து மனுதாரர்/ வாதியின் அமைதியான அனுபோக சுவாதீனத்திற்கு பிரதிவாதிகளோ அவரது ஆட்களோ எந்தவிதமான இடையூறுகளும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டுமே கோரியிருந்தார். அதன் பின்னிட்டு தாவா சொத்துக்களை நில அளவை செய்து பார்த்தபோது தான் தாவா சொத்தில் பிரதிவாதிகள் வீடு வகையறாக்கள் கட்டி அதன் மேற்கூரை மனுதாரர்/ வாதியின் சொத்திற்குள் வருமாறு ஆக்கிரமிப்புகள் செய்துள்ளார். இவ்வாறான நிலையில் அசல் வழக்கில் கூடுதலாக பரிகாரங்கள் கேட்கப்பட்டு தாவாவை திருத்தம் செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

1.2). இந்நிலையில் இச்சமூகம் நீதிமன்றம் இம்மனுவினை அனுமதிக்காத நிலையில் புதிய வழக்குகள் தாக்கல் செய்யப்பட வேண்டிய (Multiciplicity of Proceedings) சூழ்நிலை ஏற்பட்டு விடும். அதனால் மனுதாரர்/ வாதிக்கு பெருத்த இழப்பும் நஷ்டமும் ஏற்படும்.

**2). எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம் :**

2.1). மேற்படி மனு பொய்யானது மோசடியானது, சட்டப்படியும் பொருண்மைகளின் படியும் நிலைக்கத்தக்கதல்ல. எதிர்மனுதாரர்கள் ஒப்புக்கொண்டவற்றைத் தவிர மற்றவற்றை மனுதாரரே நிரூபிக்க வேண்டும். எதிர்மனுதாரர்கள் மனுதாரரின் சொத்தை ஒருபோதும் ஆக்கிரமிப்பு செய்யவில்லை நான்கு எல்லைகளை தாண்டி எதிர்மனுதாரர்கள் ஆக்கிரமிப்பு செய்யவில்லை. மேற்படி IA.No.4/2025 மற்றும் IA.No.5/2025 மனுக்களானது எதிர்மனுதாரர்களை கொடுமைப்படுத்த வேண்டி வழக்குகளை தாமதப்படுத்த வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

3). இம்மனு அனுமதிக்கதக்கதா? என்பதே தீர்வுகாணப்பட வேண்டியுள்ளது.

4). இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

**5). தீர்வு :-**

5.1). மனு பிரமாணப்பத்திரிக்கை, எதிருரை, மற்றும் இருதரப்பு வாதுரைகள் கவனமாக பரிசீலிக்கப்பட்டன. இரு தரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு வழக்கு விசாரணைக்காக நிலுவையில் உள்ளது. இந்நிலையில் மனுதாரர் அசல் வழக்கில் திருத்தம் செய்ய வேண்டி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். இதில் மனுதாரர் நீதிமன்ற ஆணையரை நியமிக்க கோரி மனு தாக்கல் செய்து IA.No.3/2022 - ல் நில அளவையர் முன்னிலையில் தாவா சொத்தை அளவீடு செய்து தாவா சொத்தான சைட் நம்பர் பத்தில் சுமார் 5.5 சதுர மீட்டர் அளவு மற்றும் சைட் நம்பர் 11 – ல் சுமார் 9.9 சதுர மீட்டர் அளவு ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாக அறிக்கை வழங்கி உள்ளார்.

5.2). எனவே மேற்படி நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் சொல்லியுள்ள ஆக்கிரமிப்பின் அடிப்படையில் வழக்குரையில் திருத்தம் மேற்கொள்ள மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளதால் இந்த மனு அனுமதிக்கத்தக்கதாகும். மனுதாரர் வழக்குரையில் திருத்தம் செய்யக்கோரி உள்ள திருத்தமானது அசல் வழக்கில் இறுதி முடிவை தீர்மானிக்க மிகவும் அவசியமான ஒன்றாகும். எனவே நீதியின் நலன் கருதி மேற்படி மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவாக மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 9-ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Sd/M.Santhosham
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**சூலூர்.**

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** :- இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** :- இல்லை

Sd/M.Santhosham
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**சூலூர்.**

Draft/Fair order
IA.No.4/2025 in
OS.No.187/2022
Dated:.09.10.2025
DMC, Sulur.